சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.39/2024</u>

21.01.2026

வா.சா.1 திரு. சச்சிதானந்தம், த/பெ. நாராயணசாமி

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் எந்த வங்கிக்கு உண்டான காசோலையை பிரதிவாதி கொடுத்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிராதில் காசோலை எண் எனது வங்கி கணக்கு எண் ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனது வங்கி கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. காசோலையை எந்த தேதியில் யார் முன்னிலையில் கொடுத்தார் என்று பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லும் காசோலையின் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பிராதில் காசோலை வழங்கப்பட்ட அன்றைய தேதியிலேயே தாவா கடனுறுதிச்சீட்டு எழுதியதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. காசோலை யாரால் எந்த இடத்தில் வைத்து எழுதப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிராதில் முழுமையான சங்கதிகளை சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆண்டியூர், மேலத்தெருவில் வசிக்கிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் மனைவி பெயர் எனக்கு தெரியாது. அவரை நேரில் பார்த்ததில்லை. பிரதிவாதியின் மனைவி ஆண்டியூரில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் எனது மகன் மற்றும் மருமகள் பிரபாவதி வசிக்கிறேனா என்றால் இல்லை. எனது மருமகளுடன் எனக்கு பேச்சுவார்த்தையில்லை. நான் கதவு எண் 7 பிள்ளையார்கோவில் தெருவில் வசிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது மருமகள் பிரதிவாதி மீது வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி எனது மருமகளிடம் ரூ.60,000/- பணம் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டை பிரதிவாதி எனது மருமகள் பிரபாவதிக்கு எழுதிக்கொடுத்தார் என்றாலும் அவரிடம் வாங்கி நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றாலும் சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டை மகாதேவன் என்பவர் பூர்த்தி செய்தார். மகாதேவனை பிரதிவாதிதான் அழைத்துவந்தார். தாவா கடனுறுதிசீட்டில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டாம்பில் எவ்வளவு ரூபாய் ஒட்டப்பட்டுள்ளது என்றால் ரூ.1/-க்கு ஒட்டப்பட்டுள்ளது. கடனுறுதிசீட்டில் சேங்கனூர் செந்தில்குமார் மற்றும் ஒரு மணி என்பவர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். பிரதிவாதி யாரையும் அழைத்துவரவில்லை என்றாலும் நான் எனக்கு வேண்டியவர்களை வைத்து பூர்த்தி செய்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பிரதிவாதிக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் 10.09.2020 ல் கடன் வாங்கவில்லை என்றாலும் அதற்காக தாவா கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. ரூ.1,00,000/- கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி விவசாயம் செய்கிறார் என்றாலும் காண்டிராக்ட் தொழில் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி 2019 ஆம் வருடம் எழுதிக்கொடுத்த கடனுறுதிசீட்டை காலாவாதி முடிந்து தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. தாவா தொகையை பிரதிவாதி கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.